CC.No.183/2022

DATED:- 04.11.2024

PW 1:- ஹபிபுல்லா,த/பெ. நாகூர் கனி,

வயது 50

(Solemnly affirmed before this court under act X of 1969)

எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-

1. நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள எதிரில் ஒருவர் என்னுடைய தந்தை மற்றும் மற்றொருவர் என்னுடைய உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். நான் தற்போது ஆட்டோ ஓட்டுநராக உள்ளேன். அது என்னுடைய சொந்த ஆட்டோ என்றால் சரிதான். காலை எத்தனை மணிக்கு ஆட்டோ ஓட்டுவதற்கு செல்வேன் என்றும் எத்தனை மணிக்கு வீடு திரும்பும் என்றால் காலை சுமார் 7 மணி அளவில் ஆட்டோ ஓட்டுவதற்கு செல்வேன். சுமார் 11 மணி அளவில் வீட்டிற்கு வந்து விட்டு, மீண்டும் ஆட்டோ ஓட்டுவதற்கு செல்வேன். மாலை சுமார் 4, 5 மணி அளவில் ஆட்டோ ஓட்டுவதற்கு செல்வேன். எவ்வளவு வருமானம் வரும் என்றால் ஒரு நாளைக்கு சுமார் 300 முதல் 400 வரை வருமானம் வரும்.

2. என் தந்தை மற்றும் அண்ணன் திருவொற்றியூரில் பரோட்டா கடை வைத்து நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். சுமார் 50 ஆண்டு காலமாக என்னுடைய தந்தை மேற்படி பரோட்டா கடை நடத்தி வருகிறார் என்றால் சரிதான். தற்போது அவர் பரோட்டா கடை வைத்திருப்பது அவருடைய சொந்த கடை என்றால் சரிதான். அவர் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். என் உடன் பிறந்த சகோதரர் மற்றும் சகோதரிகள் மொத்தம் ஐந்து பேர். எனக்கு குடும்பம் உள்ளது ஆனால் மனைவியுடன் வாழவில்லை.

3. கடந்த 05.12.2021 அன்று நான் ஏன் சம்பவம் நடந்ததாக கூறப்படுகின்ற கடைக்குச் சென்றேன் என்றால் மேற்படி கடையை ஜமாத் மூலமாக பேசி

என்னுடைய ஆட்டோ உபகரணங்கள் வைப்பதற்கு ஒதுக்கி கொடுக்கப்பட்டது. என்னை அங்கேயே தங்கிக் கொள்ளவும் செய்தார்கள். அதனால் நான் என் கடைக்கு சென்றேன். ஜமாத் மூலமாக மேற்படி கடை எனக்கு கொடுப்பது சம்பந்தமாக சமூகமாக பேசி முடிவு எடுக்கப்பட்டது என்றால் சரிதான். கடந்த 05.12.2021 அன்று ஜமாதில் வைத்து எனக்கும் என்னுடைய தந்தைக்கும் சமரசம் பேசப்பட்டதா என்றால் அவ்வாறு இல்லை.

4. கடந்த 05.12.2021 அன்று ஜமாஅத் மூலமாக எனக்கும் என்னுடைய தந்தைக்கும் சமாதானம் பேசப்பட்டு என்னுடைய தந்தையிடம் இருந்து நான் ரூபாய் இரண்டு லட்சம் ரொக்கமாக பெற்றுக் கொண்டேன் என்றால் சரியல்ல. அன்றைய தேதியில் மேற்படி கடையை என்னுடைய பெயரில் எழுதி வைக்குமாறு என்னுடைய தந்தையிடம் கேட்டேன் என்றால் சரியல்ல. கடந்த 05.12.2021 அன்று ஜமாஅத் மூலமாக ரூபாய் 2 லட்சம் என்னுடைய தந்தையிடம் இருந்து பெற்றுக் கொண்டு, வேண்டுமென்று, நான்கு மாதம் கழித்து, 08.04.2022 அன்று என் தந்தை மீது பணம் பறிக்க வேண்டும் என்ற காரணத்திற்காக அவர் மீது பொய்யான புகார் கொடுத்து நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. கடந்த 08.04.2022 அன்று, மேற்படி கூறியது போல் மீண்டும் என் தந்தையிடமிருந்து பணத்தை ரொக்கமாக பெற்றுக் கொண்டு சமாதானமாக சென்றுவிட்டேன் என்று நீதிபதி முன்பு எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் ஆனால் எதற்காக அந்த கையொப்பம் என்னிடம் வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. (08.04.2022 அன்று எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தும் பொழுது தாக்கல் செய்யப்பட்ட புகார்தாரர் எழுதிக் கொடுத்ததாக வழக்கு ஆவணத்தில் உள்ள ஆவணத்தின் சங்கதிகளை சாட்சி மறுத்தார்).

6. என்னுடைய மனநிலை சம்பந்தமாக ஏற்கனவே சிகிச்சை எடுத்துள்ளேன் என்றால் சரிதான். தற்போதும், ஆழ்வார்பேட்டையில் உள்ள மருத்துவர் நம்பிராஜன் என்பவரிடம் மனநிலை சம்பந்தமாக சிகிச்சை எடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. சாட்சி தானாக முன்வந்து மனநிலை சம்பந்தமாக நான் சிகிச்சை பெறவில்லை நரம்பு சம்பந்தமாக நான் சிகிச்சை பெற்று என்று கூறினார். என்னுடைய தந்தை சொத்தை பிரித்துக் கொடுக்காததால் அவரிடமிருந்து சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

7. சமீபத்தில், கடந்த 10 நாட்களுக்கு முன்பு, என்னுடைய தந்தை வீட்டு வாடகைதாரர்கள் அவர்களிடம் நான் தகராறு செய்தது சம்பந்தமாக திருவொற்றியூர் காவல் நிலையத்தில் என் மீது புகார் கொடுக்கப்பட்டது என்றால் நான் காவல் நிலையம் சென்றேன் ஆனால் நான் அதை செய்யவில்லை. மேற்படி வழக்கை விசாரணை செய்த விசாரணை அதிகாரி பெயர் என்ன என்றால் அது எனக்கு தெரியாது. அவர் எனக்கு நன்கு பழக்கமானவர் என்றால் சரியல்ல.8. இந்த வழக்கின் விசாரணை அதிகாரி எனக்கு நன்கு பழக்கமானவர் என்றும் என்னுடைய சமுதாயத்தை சேர்ந்தவர் என்றும் அதனால் அவர் மூலமாக எதிரிகளுக்கு எதிராக தவறான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் விசாரணை அதிகாரிக்கும் என்னுடைய தந்தையான எதிரி அவர்களுக்கும் உணவு கடை வைப்பது சம்பந்தமாக காழ்ப்புணர்ச்சி இருந்தது என்றும் என்னுடைய புகாரை சாதகமாக பயன்படுத்தி எதிரிகள் மீது தவறான குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

8. கடந்த 05.12.2021 அன்று நான் மருத்துவமனையில் அனுமதி பெற்று இருந்தது போல் என்னுடைய தந்தையும் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருந்தார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

அன்றைய தினம், திட்டமிட்டு என் தந்தை மற்றும் சகோதரரை அடிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு வந்து சண்டையிட்டேன் என்றால் சரியல்ல. எனக்கும் எதிரிக்கும் உள்ள வழக்கு உரிமையியல் வழக்கு என்றும் அதனை திசை திருப்புவதற்காக காவலர்கள் உதவியுடன் எதிரிகளுக்கு எதிராக குற்ற வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னோட மனைவியை விவாகரத்து செய்வது சம்பந்தமாக செட்டில்மென்ட்டாக தந்தை ரூபாய் 5 லட்சம் எனக்கு கொடுத்தார் என்றால் சரியல்ல.